OS No.531/2023

PW-2 -வரதராஜன்

த/பெ.சங்கர்

நாள். 17.11.2025

<u>வாதி தரப்பில் சாட்சி-2 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1.நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்வதற்கு எந்த அழைப்பாணையும் எனக்கு வரவில்லை. வாதி அழைத்ததன் பெயரில்தான் இன்று ஆஜர் ஆனேன். வாதி என் நண்பர். பிரதிவாதி காசோலை கொடுத்தார் அதற்காக அதன் அடிப்படையில் தான் வாதி கடன் கொடுத்தார். காசோலையின் எண் எனக்கு தெரியாது என்ன வங்கி என்று தெரியாது. ஆனால் காசோலை கொடுத்த விபரம் மட்டும் தெரியும்.

2.பிராமிசரி நோட்டு எழுதி கொடுத்து தான் வட்டிக்கு கடன் கொடுப்பார்கள் என்றும் அப்படி கொடுக்கப்படாத தான் நான் இந்த வழக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இந்த காசோலை தவிர வேற ஆவணங்கள் கிடையாது என்றால் வேற ஆவணங்கள் கிடையாது. வாதி காசோலையை ஐசிஐசிஐ வங்கியில் செலுத்தினார்.அஞ்சு எட்டு தேதியாகும். இந்த விபரத்தை எனக்கு நேரில் பார்க்காததால் நேரில் தெரியாது யுகத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன்.

3.இந்த வழக்கில் வாதி பிரதிவாதிக்கிடையே கடன் வரவு செலவு இருந்ததாக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சரியல்ல. நான் எங்கும் எதிலும் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட காசோலை வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியும். எந்த நீதிமன்றத்தில் என்று எனக்கு தெரியாது. வாதி என் நண்பன் நான் என்பதால் பாதிக்காத பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு வாதி எந்த கடனும் கொடுக்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக பிரதிவாதி எந்த காசோலையும் வாதிக்கு கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4. வாதி, பிரதிவாதியிடம் இருந்து காசோலை திருடி வாதி பிரதிவாதி மீது பொய் வழக்கு போட்டு இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் வீட்டிற்கு பிரதிவாதி வரவே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA

DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.